# 12-05-2024 செய்தி

## பாலஸ்தீனத்துக்கு முழு உறுப்பினர் அந்தஸ்து : ஐ.நாவில் தீர்மானம் நிறைவேற்றம்

- பாலஸ்தீனத்தை ஐ.நாவின் முழுமையான உறுப்பு நாடாக்க வழிவகுக்கும் தீர்மானம் ஐ.நா பொதுச் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.
- 193 உறுப்பு நாடுகளைக் கொண்ட பொதுச் சபையில் அந்தத் தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பு நடைபெற்றது.
- இதில், தீர்மானத்துக்கு ஆதரவாக 143 நாடுகள் வாக்களித்தன.
- 25 நாடுகள் வாக்களிப்பைப் புறக்கணித்தன. இஸ்ரேல், அமெரிக்கா உள்ளிட்ட 9 நாடுகள் தீர்மானத்தை எதிர்த்து வாக்களித்தன.
- தற்போதைய நிலையில் ஐ.நா பொதுச் சபையில் பார்வையாளராக மட்டுமே பாலஸ்தீனம் இருந்துவருகிறது.
- 2012ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட இந்த அஸ்தஸ்தின் மூலம் பொதுச் சபை நிகழ்ச்சிகளில் பங்கேற்க பாலஸ்தீனத்தால் முடியும். ஆனால் வாக்கெடுப்புகளில் பங்கேற்க முடியாது.
- இந்த நிலையில், பாலஸ்தீனத்துக்கு ஐ.நா பொதுச் சபையில் முழு உறுப்பினர் அந்தஸ்து அளிப்பதற்காக ஐ.நா வில் அல்ஜீரியா கடந்த மாதம் கொண்டுவந்த தீர்மானத்தை அமெரிக்கா தனது சிறப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி ரத்து செய்தது.

**தீர்மானத்தை ஆதரித்த இந்தியா**

- பாலஸ்தீனத்தை முழு ஐ.நா உறுப்பினராக்கும் தீர்மானத்தை ஆதரித்து இந்தியா வாக்களித்தது.
- பாலஸ்தீன மக்களின் பிரதிநிதியாக பிஎல்ஓ அமைப்பை 1974ஆம் ஆண்டு இந்தியா அங்கீகரித்து, அத்தகைய அங்கீகாரத்தை வழங்கிய முதல் அரபு அல்லாத நாடு இந்தியாவாகும்.

## உலகின் முதல் பறக்கும் டாக்சி

- சென்னை ஐ.ஐ.டி புதிய தொழில்நுட்பங்களை கண்டுபிடிப்பதில் முன்னோடியாக திகழ்கிறது.
- தற்போது ஒரு தனியார் நிறுவனத்துடன் இணைந்து பறக்கும் டாக்சியை தயாரித்து வருகிறது.
- முழுவதும் மின்சாரத்தில் இயங்கும் இந்த டாக்சி பயன்பாட்டிற்கு வந்தால், உலகின் முதல் பறக்கும் மின்சார டாக்சியாக இது இருக்கும்.
- தற்போதைய சாலை போக்குவரத்து நெருக்கடிக்கு இந்த பறக்கும் டாக்சி மிகுந்த பயன் உள்ளதாக இருக்கும்.
- இந்த பறக்கும் மின்சார டாக்சி, சுமார் 200 கிலோ மீட்டர் வேகத்தில் செல்லும்.
- இந்த டாக்சி தரையிறங்கவும், பறக்கவும் சுமார் 15 அடி நீளமும், 15 அடி அகலமும் கொண்ட இடம் போதுமானது.
- இது அப்படியே மேல் நோக்கி எழும்பும், அதே போல் கீழே நோக்கி இறங்கும். 2 பேர் அதில் அமர்ந்து பயணம் செல்லலாம்.

## சாகித்ய அகாடமி பெல்லோஷிப்

- பிரபல எழுத்தாளர் ரஸ்கின் பாண்டுக்கு இலக்கிய அமைப்பினால் வழங்கப்படும் உயரிய கவுரவமான சாகித்ய அகாடமி பெல்லோஷிப் வழங்கப்பட்டது.

**குறிப்பிடத்தக்க படைப்புகள்:**

- Vagrants in the Valley
- Angry River
- All Roads Lead to Ganga
- Leopard on the Mountain
- Once Upon a Monsoon Time
- Strangers in the Night
- Tales of Fosterganj
- Too Much Trouble

## போட்டியிடும் இடங்களுக்கு என்ன விதிகள் உள்ளன?

- பிரிவு 33(7)மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் (RPA), 1951ன் படி, ஒரு வேட்பாளர் இரண்டு தொகுதிகளில் இருந்து தேர்தலில் போட்டியிட அனுமதிக்கப்படுகிறார்.
- அதே சட்டத்தின் 70வது பிரிவு, ஒரு வேட்பாளர் ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப் பட்டிருந்தாலும், ஒரு நேரத்தில் ஒரு இடத்திற்கு மட்டுமே உறுப்பினராக இருக்க முடியும் என்று கூறுகிறது.
- எனவே, ஒரு வேட்பாளர் இரண்டு இடங்களில் வெற்றி பெற்றால், அவர் காலி செய்யும் இடத்தில் இருந்து இடைத்தேர்தல் அவசியம்.
- ஒரு நபர் ஒரு குறிப்பிட்ட மாநிலத்தில் சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட வாக்காளராக இருக்க வேண்டும். ஆனால் லோக்சபா தேர்தலில் போட்டியிட, நாட்டின் எந்த ஒரு தொகுதியிலும் வாக்காளராக இருக்கும் ஒருவர் போட்டியிடலாம்.
- ஒருவர் எந்தவொரு தொகுதியிலும் பதிவு செய்யப்பட்ட வாக்காளராக இருந்தால், அவர் அசாம், லட்சத்தீவு மற்றும் சிக்கிம் தவிர, இந்தியாவில் உள்ள எந்த தொகுதியிலும் போட்டியிடலாம்.